

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 316 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – ஆனி 12 – வியாழக்கிழமை 26 ஜூன் 2025 – வெளியூர் 28 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 316 : Thiruvalluvar Year - 2056 - Aani 12- Thursday 26 June 2025 - Dak 28 Pages ₹ 5.00


## ஏழை, நடுத்தர மக்களைக் கவலைக்குள்ளாக்கும்

# இரயில் கட்டணங்களை உயர்த்த வேண்டாம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் - பிரதமருக்கு வலியுறுத்தல்!



**சென்னை, ஜூன் 26-**

**இரயில் கட்டண உயர்வு அறிவிப்பு குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிடுகையில் “இந்த அறிவிப்பு ஏழை, எளிய, நடுத்தர மக்களின் மகிழ்ச்சியைக் களவாடியுள்ளது எனவும், ஏற்கனவே விலைவாசி உயர்வு மற்றும் சிலிண்டர் விலை உயர்வினால் நடுத்தரக் குடும்பங்கள் அல்லற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களின் கவலை மேலும் அதிகரிக்காதவாறு இரயில் கட்டணங்களை உயர்த்த வேண்டாம்” எனவும் பிரதமருக்கும், இரயில்வே அமைச்சருக்கும் வேண்டுகோள் விடுத்து வலியுறுத்தியுள்ளார்.**

இரயில் கட்டணங்கள் ஜூலை முதல் உயர்த்தப்படவுள்ளது தொடர்பான தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

இந்திய இரயில்வே என்பது ஏழை நடுத்தர மக்களின் பயணங்களுக்கானது மட்டுமல்ல; அது, அவர்களது அன்றாட வாழ்வில் ஓர் அங்கம்!

இன்று காட்பாடி செல்ல இரயில் நிலையம் வந்தபோது, என்னை அன்போடு வரவேற்ற மக்களிடம் பேசினேன். வழக்கமான உற்சாகமும் மகிழ்ச்சியும் குறைந்திருந்தது. ஜூலை முதல் உயர்த்தப்படவுள்ள இரயில் கட்டணங்களும் குறைந்து வரும் சாதாரண வகுப்புப் பெட்டிகளும் அவர்களது மகிழ்ச்சியைக் களவாடியுள்ளது.

பிரதமர் நரேந்திர மோடி மற்றும் அஸ்வினி வைஷ்ணவ் அவர்களையும், மக்களின் சார்பாக நான் கேட்டுக்கொள்வது...

AC பெட்டிகள் உயர்த்த வேண்டும் எனச் சாதாரண வகுப்புப் பெட்டிகளைக் குறைக்க வேண்டாம். இரயில் கட்டணங்களையும் உயர்த்த வேண்டாம்.

ஏற்கெனவே விலைவாசி உயர்வு முதல் சிலிண்டர் விலை உயர்வு வரை நம் நடுத்தரக் குடும்பங்கள் அல்லற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களது கவலையை மேலும் அதிகரித்திட வேண்டாம் எனக் கேட்டுக் கொள்கிறேன்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

## இந்தியாவில் அறிவிக்கப் படாத அவசர நிலை !

### காங்கிரஸ் குற்றச்சாட்டு!

*புதுடெல்லி, ஜூன் 26-*

*கடந்த 11 ஆண்டுகளாக இந்திய ஜனநாயகத்தின் மீது ஐந்து திசைகளில் இருந்தும் தாக்குதல் நிகழ்ந்து வருவதாக காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் ஜெய்ராம் ரமேஷ் குறிப்பிட்டுள்ளார்.*

*முதலில் மாநிலங்களை கைப்பற்றி சட்டம், நீதிமன்றம், தேர்தல் ஆணையம், ஊடகம் என அனைத்தும் ஒரு தனிப்பட்ட அமைப்பின் கட்டுப்பாட்டில் சென்று விட்டதாக ஜெய்ராம் ரமேஷ் குற்றம்சாட்டியுள்ளார்.*

*பெரும்பாலான ஊடகங்கள் தெளிவாக, அரசு ஆதரவு நிலைப்பாட்டை எடுத்துள்ளதால், மக்கள் உண்மையை அறிய முடியாத நிலை உருவாகியுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். நாட்டின் அமைப்புசார் நிதி வளங்கள், சில குறிப்பிட்ட சக்திகளுக்கு மட்டுமே சேரும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளதாக ஜெய்ராம் ரமேஷ் குறிப்பிட்டுள்ளார்.*

*மேலும், உஃபா, பிஎம்எல்ஏ போன்ற கடுமையான சட்டங்கள், பொதுமக்கள், எதிர்க்கட்சியினர், சமூக செயற்பாட்டாளர்கள் உள்ளிட்டோருக்கு எதிராக பயன்படுத்தப்படுவதாகவும் ஜெய்ராம் ரமேஷ் குற்றம் சாட்டியுள்ளார். கல்வி, பண்பாடு, வரலாறு இவற்றின் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டு, பகுத்தறிவை அழிக்க முயற்சி நடப்பதாகவும், இந்திய ஜனநாயகம் மீது பயங்கரமான தாக்குதல் நடத்தப்பட்டு வருவதாகவும், இது அறிவிக்கப்படாத அவசரநிலை என்றும் ஜெய்ராம் ரமேஷ் விமர்சித்துள்ளார்.*




திருப்பத்தூர் மாவட்டம்



ரூ.517 கோடியில்

புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டுதல்

முடிவுற்ற திட்டப் பணிகளைத் திறந்து வைத்தல்

மற்றும்

அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா

தலைமை

திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

திருப்பத்தூர் மாவட்டத்தில் கடந்த 4 ஆண்டுகளில் திராவிட மாடல் அரசின் சாதனைகள்...

ரூ.274 கோடியில் 1 இலட்சத்து 168 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள்

ரூ.7,026 கோடியில் 74,267 வளர்ச்சித் திட்டப் பணிகள்

மொத்தம் ரூ.7,300 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் மற்றும் வளர்ச்சித் திட்டப் பணிகள்



அரசு மருத்துவமனை, வாணியம்பாடி, திருப்பத்தூர்



வளையாம்பட்டு - வாணியம்பாடி சாலை மேம்பாலம், திருப்பத்தூர்





அரசு மருத்துவமனை, ஆம்பூர், திருப்பத்தூர்



ஜோலார்பேட்டை - சோமநாயக்கன்பட்டி
இரயில் நிலையங்களுக்கு இடையிலான மேம்பாலம், திருப்பத்தூர்

செ.ம.தொ.இ/658/வரைகலை/2025

நாள் : 26.6.2025 வியாழக்கிழமை, நேரம் : காலை 11.00 மணி, இடம் : மண்டலவாடி, திருப்பத்தூர் மாவட்டம்

எல்லார்க்கும் எல்லாம் !

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in

வெளியீடு : இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-600 009